# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும்**

சுட்டெண்:...................... **தரம் - 07** **நேரம் : 02 மணி**

## பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

1. பால் நிலவு பொழியும் சந்திரனிலும் களங்கம் உண்டு. ‘‘களங்கம்’’ என்பதன் ஒத்தசொல்
   1. திங்கள் 2. தூய்மை 3. குற்றம் 4. வெண்மை

2. ‘‘கல்லும் மலையும் குதித்து வந்தேன்’’ இதில் மலை என்பதன் எதிர்ச்சொல்
   1. குன்று 2. கிரி 3. இமயமலை 4. மடு

3. ‘‘யாம் ஐவேம்’’என்ற பாடலின் ஆசிரியர் யார்?
   1. கவிஞர் அழகசுந்தரதேசிகர் 2. பாரதியார்
   3. எஸ்.சோதி 4. திமிலைத்துமிலன்

4. நானும் நண்பர்களும் கணினி பார்த்தோம் இவ்வாக்கியம் உணர்த்தும் காலம்.
   1. நிகழ்காலம் 2. தற்காலம் 3. இறந்தகாலம் 4. எதிர்காலம்

5. ‘‘எண்ணித் துணிக கருமம்’’ இதில் வந்துள்ள பயனிலை
   1. எண்ணி 2. கருமம் 3.. செய்க 4. துணிக

6. ஒன்றன்பாற் சொல்லாக அமைவது
   1. ஆடுகள் 2. அதிபர் 3. மரங்கள் 4. இலை

7. நீ கேட்டாலன்றி நான்
   1. சொல்லேன் 2. சொல்வேன் 3. சொன்னேன் 4. சொன்னான்

8. நல்ல+உள்ளம் என்பதை புணர்த்தினால்
   1. நல்லுள்ளம் 2. நல்லவுள்ளம் 3. நல்லுல்லம் 4. நன்மை உள்ளம்

9. அளி, சுரும்பு, மதுகரம் என்பவற்றைக் குறிக்கும் ஒருசொல்
   1. றப்பர் 2. வண்டு 3. தூசு 4. துகள்

10. குயவனுக்கு குயத்தி என்பது போல கொழுநனுக்கு
    1. கொழுந்தி 2. மனைவி 3. மாணவி 4. பாதகி

11. பொருத்தமற்ற சொல் வகை
    1. தொழிற்பெயர் - பொரியல் 2. காலப்பெயர் - இளவேனில்
    3. பண்புப்பெயர் - ஆடல் 4. இடப்பெயர் - பாடசாலை

12. இறந்தகால இடைநிலை
    1. ந், ன்    2. ப், க்    3. ட்,ல்    4. கிறு, இன்

13. இருபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா
    1. மணிவிழா    2. அமுதவிழா    3. வைரவிழா    4. வெள்ளிவிழா

14. இடியேறு கேட்ட நாகம் போல எனும் மரபுத்தொடர் குறிக்கும் பொருள்
    1. துணிவு    2. கலக்கம்    3. விரைவு    4. உருகுதல்

15. உயிர்மெய் நெடில் எழுத்துக்கள் எத்தனை
    1. 216    2. 90    3. 246    4. 126

(15x2= 30 புள்ளிகள்)

## பகுதி - II

**01.** பின்வருவனவற்றில் எவையேனும் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.
1. ஒழுக்கம் விழுப்பம் தரும்
2. போதையை ஒழிப்போம்
3. பழுதடைந்த கதிரை தன் கதையை கூறல்
4. நான் விரும்பும் பெரியார்

(20 புள்ளிகள்)

**02.** வெளிநாட்டில் இருக்கும் மாமாவிற்கு தமிழ் அகராதி ஒன்று வாங்கி அனுப்புமாறு கூறி 100 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

**03.** சுருக்கமான விடை தருக.
1. ஆரம்பத்தில் தட்டச்சு எந்த மொழியில் உருவாக்கப்பட்டது?
2. காந்தியடிகள் தங்கியிருந்த சிறைச்சாலை எது?
3. "யாம் ஐவேம்"எனும் பாடலில் சிறுமியின் அழகு எவ்வாறு காட்டப்படுகிறது?
4. தமிழ் தட்டச்சை உருவாக்கியவர் யார்?
5. தொல்காப்பியர் குறிப்பிடும் நானிலங்களும் எவை?
6. அடைமொழியின் மறுபெயர் என்ன?
7. விலங்குகளின் அழிவிற்கு காரணமாக எவை குறிப்பிடப்படுகின்றன?
8. ஆறு எவற்றையெல்லாம் கடந்து வந்தது எனக் கூறப்பட்டுள்ளது?
9. அந்தரே தந்தையிடம் வினவியது என்ன?
10. அந்தரே திருமணவீட்டில் எவ்வாறு நடந்தான்?

(10x3= 30 புள்ளிகள்)

**04.** பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுத்துப் பிழைகளை இனங்கண்டு எழுதுக?
"இராவணா இண்டுபோய் போறுக்குநாளைவா"என இராமன் கூரினான்.

(05 புள்ளிகள்)

**05.** வாக்கியம் அமைக்குக.
1. கலி
2. அழை
3. அரம்
4. பணி
5. பாணம்

(05 புள்ளிகள்)